[2010 ஏப்ரல் 21

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கையைப் பரிசீலிப்பதாக அறிவித்திருக்கிறார்கள். எங்களுடைய மாவட்டம் கல்வியிலே பின்தங்கிய மாவட்டம் என்கிற காரணத்தினால், சிறப்புக் கவனம் செலுத்தி, என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டு, நன்றி சொல்லி விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

76—

குடமுழுக்கு

***62288—திரு. ஆர்.கே. பாரதி மோகன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, பழைமைவாய்ந்த கோட்டூர் அருள்மிகு காசி விஸ்வநாதர் கோயிலுக்குக் குடமுழுக்கு செய்ய நிதி ஒதுக்கித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், கோட்டூர் அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. இத்திருக்கோயிலில் சுவாமி சன்னதியின் கர்ப்பக் கிரக மண்டபம் மட்டும், ரூ.25,000/- மதிப்பீட்டில் கிராமப்புறத் திருக்கோயில்கள் திருப்பணித் • திட்டத்தின்கீழ் திருப்பணி செய்யப்பட்டு, புதுப்பிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய பணிகளைச் செய்திட, உத்தேசமாக ரூ.20 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணியினைச் செய்திட, திருக்கோயிலில் போதிய நிதி வசதியில்லை. திருப்பணிக்குப் பொதுமக்கள் நிதியுதவி வழங்கிட

2010 ஏப்ரல் 21]

முன்வரும் நிலையில், துறை சார்பில், திருப்பணியில் பொதுமக்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில், மதிப்பீட்டுத் தொகையில் 25 சதவிகிதத்திற்கு மிகாது வழங்கி, பணிகளை மேற்கொள்ள இயலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை, கும்பகோணம் உதவி ஆணையர் கட்டுப்பாட்டிலுள்ளது. சுமார் 300 ஆண்டுகளுக்கு மேலாக பழைமைவாய்ந்த, புராதன கோட்டூர் ஸ்ரீ விசாலாட்சி சமேத ஸ்ரீ காசி விஸ்வநாதர் திருக்கோயில் முன்மண்டபம், பிரகாரம், சுற்றுச் சுவர் அனைத்தும் இடிந்து கீழே விழக்கூடிய சூழ்நிலையிலுள்ளன. ஆண்டுதோறும் கஞ்சனூர், கோட்டூர் மாசி மகம் தீர்த்தவாரிக்குச் சுமார் 25,000 பக்தர்கள் வந்து இந்தக் கோயிலில் தரிசனம் செய்து வருகின்றனர். தற்போது இத்திருக்கோயில் பழுதடைந்துள்ளதால், சேவார்த்திரிகள் சுவாமி தரிசனம் செய்திட அஞ்சுகின்றனர். இத்திருக்கோயிலில் கதவுகள் எதுவும் இல்லாததால், 7-04-2010 அன்று ஸ்ரீ விசாலாட்சி அம்பாள், ஸ்ரீ நந்தி, ஸ்ரீ சுப்பிரமணியர் ஆகிய மூன்று கல் விக்கிரகங்களும் களவு போய் உள்ளன. பந்தநல்லூர் காவல் நிலையத்தில் 8-04-2010 அன்று புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பழைமைவாய்ந்த புராதன திருக்கோயிலுக்கு 13-வது நிதிக் குழு திட்டத்தின்கீழோ அல்லது நிதி உதவியின்மூலமாகவோ திருக்கோயில் திருப்பணிகள் செய்து, குடமுழுக்குச் செய்திட, பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, இந்தத் திருக்கோயில், நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டிருக்கின்ற, 300 ஆண்டுகளுக்கு முந்தைய திருக்கோயில் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அந்தத் திருக்கோயிலில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, 25,000, 35,000, என்று பக்தர்கள் வந்து செல்வதற்கான ஆதாரங்கள் இல்லை. காரணம், ஆண்டு வருவாயே அதற்கு 5000/- ரூபாய்தான் வந்து கொண்டிருக்கின்றது.

துறை சார்பிலே தரப்பட்ட விவரத்தில், அங்கே குறிப்பிடும் வகையிலே திருவிழாக்கள் இல்லையென்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார்கள். திருக்கோயில் மிகவும் பழுதடைந்து இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்தத் திருக்கோயிலின் நிதியாதாரம் எப்படி இருக்கின்றது என்றால், ஒரு கால பூஜை திட்டத்தின்கீழ் 25,000/- ரூபாய் வைப்பு நிதி வைக்கப்பட்டு, அந்த நிதியிலேதான் இப்போது அங்கே விளக்கு ஏற்றப்படுகிறது; ஒரு கால பூஜை நடைபெறுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுடைய இந்த நல்லாட்சியில், அனைத்துத் திருக்கோயில்களிலும் திருப்பணிகளைச் செய்து, குடமுழுக்கு நடத்திட வேண்டுமென்ற எண்ணம் இருக்கின்ற காரணத்தினாலேயேதான், நாங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, 100 கோடி ரூபாய், பதின்மூன்றாவது நிதிக் குழுவின்மூலமாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெற்றுத் தந்திருக்கிறார்கள். அவையெல்லாவற்றையும்விட, திருப்பணிகள் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கிற காரணத்தினாலேதான், இதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ரூ.20 இலட்சம் செலவாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கே சட்டமன்றத்தில் எழுப்பியதைப்போல மக்களையும் அணுகி, பொதுமக்களிடத்திலும் அந்த விழிப்புணர்வை ஏற்படுத்தினால் திருப்பணிகளை விரைந்து நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

திரு. ஆர்.கே. பாரதி மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருக்கோயிலுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் 2005-2006 ஆம் ஆண்டில் 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. அதைக்கொண்டுதான் கோயில் விமானத்திற்கு மட்டும் வர்ணம் பூசப்பட்டுள்ளது. இந்தத் திருக்கோயிலின் மாசி மாதத் திருவிழா, கஞ்சனூரில் நடைபெறுவதால், தற்போது 25 ஆயிரம் பக்தர்கள் வந்து வழிபட்டுச் சென்றுள்ளார்கள், தற்சமயம் அது நடந்து கொண்டு வருகிறது. அதனால் இத்திருக்கோயிலை 13-வது நிதிக் குழுத் திட்டத்தின்கீழ், அரசே எடுத்து குடமுழுக்கு செய்ய வேண்டுகிறேன்.

2010 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல 13-வது நிதிக் குழுவிலே இப்போது நிதி அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிதி, துறைக்கு வந்த பிறகு பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

77—

கட்டட வசதி

***109520—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், தொரப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு திட்டத்தின்மூலம் வகுப்பறைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், தொரப்பாடி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நபார்டு நிதி உதவித் திட்டம் பகுதி 10-ல் 17 வகுப்பறைகள், ஒரு மேல்நிலை ஆய்வுக் கூடம், 8 கழிப்பறைகள் மற்றும் 200 மீட்டர் சுற்றுச் சுவர் போன்ற அடிப்படை வசதிகள் மேற்கொள்ள, நபார்டு வங்கியிடமிருந்து நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது. நபார்டு வங்கியிடமிருந்து நிதி உதவி பெறப்பட்டதும், மேற்கண்ட பள்ளிக்கு அடிப்படை வசதிகள் செய்து தரும் பணிகளைப் பொதுப் பணித் துறையின்மூலம் விதிகளுக்குட்பட்டு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.